JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-6 Witness
for Prosecution

| CC.No. | 170/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | PW6 கலைச்செல்வி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23th day of January 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டதன் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி நான் பணிபுரியும் முத்தூட் பின்கார்ட் பைனான்ஸில் ஏற்கனவே வரவு செலவு வைத்திருந்தார் என்றால், சரிதான். ஒவ்வொரு முறையும் நகை அடகு வைக்கும் போது தனித்தனி கணக்குகளாகத் தான் தொடங்கனும் என்றால், சரியல்ல. ஒரு முறை கணக்கு துவங்கப்பட்டால் அதில்தான் சேர்ந்து கொண்டே இருக்கும். ஒருமுறை கணக்கு துவங்கியதும் அடுத்த முறை நகை அடகு வைக்கும் போது போட்டோ மற்றும் இதர விவரங்கள் அதிலே வந்துவிடும் என்றால், சரிதான்.

கடந்த 21.08.2022ம் தேதியன்று இரவு தான் ஆஜர் எதிரியை போலீசார் அழைத்து வந்தார்கள் என்றால், சரிதான். நான் பணிபுரியும் பைனான்சியின் பணி நேரம் காலை 09.00 மணி முதல் இரவு 07.30மணி வரையாகும். கடந்த 18.08.2022ம் தேதியன்று எதிரி, அவரது மனைவி நகை என்றும், அதை வீடு கட்டுவதற்காக பணம் வேண்டும் என்றும், கூறி தான் நகை அடமானம் வைத்தார் என்றால், சரிதான். 21.08.2022ம் தேதியன்று நான் போலீசாரிடம் நகையை ஒப்படைத்து விட்டேன் என்றால், சரியல்ல. அன்றைய தினம் அவர்கள் எந்த நகையும் என்னிடம் கேட்கவில்லை. எதிரியை மீண்டும் நான் பணிபுரியும் பைனான்ஸ் நிறுவனத்திற்கு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.23 06:45:23 +0530

அழைத்து வந்தார்களா என்றால், கடந்த 27.08.2022ம் தேதியன்று மதியம் 01.00 மணி முதல் 02.00 மணிக்குள் அழைத்து வந்தார்கள். யார் யார் வந்தார்கள் என்றால், மூன்று போலீசார் மட்டும் வந்தார்கள். அன்றைய தினம் யாராவது எந்த ஆவணத்திலாவது கையொப்பம் செய்தார்களா என்றால், இரண்டு நபர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள். எனது பைனான்ஸ் நிறுவனத்தில் நான் மட்டும்தான் சாட்சி கையொப்பம் செய்தேன். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். எனது நிறுவனத்தில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால், சரிதான். நகையின் உரிமையாளர் யாரையும் போலீசார் அழைத்து வரவில்லை மற்றும் அடையாளம் காட்டவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.23 06:45:33 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.